**கம்பஹா பிரதேச சபை - 2022**
---------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கம்பஹா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பஹா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹெனரத்கொட உப அலுவலகத்தின் பெற வேண்டிய வீதவரி மீதி, நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி ரூபா 30,155,042 தொகை மற்றும் கால பகுப்பாய்வின் படி ரூபா 26,537,946 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 3,617,096 தொகை வித்தியாசமொன்று காணப்பட்டது. | மென்பொருள் வழுக்களை சரி செய்த பின்னர் சரியான காலப் பகுப்பாய்வு அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | 2002 ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. | ஹெனரத்கொட அதிகார பிரதேசத்தில் புதிதாக பெறுமதி மதிப்பீடு செய்யப்படுவதுடன், கலகிடியாவ அதிகார பிரதேசத்தின் பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் ஆரம்பிக்கப்படவில்லை என. | வீதவரி பெறுமதி மதிப்பீடு விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2155/08 இலக்கம் கொண்ட 2019 திசெம்பர் 24 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்டிருந்த மேல் மாகாண பிரதேச சபை நிதி நிருவாகத்துக்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான கட்டளை | | | |
| (i) | இலக்கம் 83(ii) | பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக தனியாக ஊழியர் கடன் முற்பணக் கணக்கொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் மூலமேனும் அறிவிக்கப்பட்டிருக்காமையால், அவ்வாறான கணக்கொன்று இதுவரை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என. | ஊழியர் கடனுக்காக தனியான முற்பணக் கணக்கொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இலக்கம் 90 | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப் பண வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிவு செய்யப்பட்டிருந்த பிழையான நிலுவைத் தொகையொன்று காட்டப்படுகின்றமையால் அட்டுரு அடிப்படையில் கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை என. | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் அட்டுரு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(1)மற்றும்(2) | ரூபா 27,476,264 தொகை பெறுமதியான 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் 2023 மே 31 திகதி அளவிலும் ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தடுத்து வைக்கப்பட வேண்டிய வைப்புக்களை தடுத்து வைத்து டென்டர் வைப்புக்களை திருப்பி செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் ஆதனவழிப்புச் செய்யப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,036,241 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 13,806,233 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 20,211,200 | 24,576,548 | 20,537,105 | 42,978,575 | 31,661,200 | 20,893,840 | 20,803,104 | 38,939,132 |
| (ii) | வாடகை | 8,303,400 | 7,578,365 | 7,734,024 | 2,700,683 | 8,986,000 | 6,672,872 | 6,535,556 | 2,998,138 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,520,000 | 1,102,512 | 1,226,012 | 64,500 | 800,000 | 780,160 | 780,106 | - |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 14,211,838 | 16,515,843 | 16,515,843 | - | 109,725,000 | 79,472,392 | 79,472,392 | - |
| | மொத்தம் | 44,246,438 | 49,773,268 | 46,012,984 | 45,743,758 | 151,172,200 | 107,819,264 | 107,591,158 | 41,937,270 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாணடின் சிட்டையிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 24,576,548 தொகை மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 15,717,367 தொகையாக இருந்தது. | சேகரிக்கப்பட்ட ஒட்டு மொத்த வருமானம் ரூபா 20,537,105 தொகையாக காணப்பட்டதுடன், வீதாசாரமாக 83.56% தொகை என. | சட்டத்தின் படி நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஆரம்ப திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரிப் பெறுமதி ரூபா 38,939,132 தொகையாக இருந்ததுடன், சேகரிக்கப்பட்ட பெறுமதி ரூபா 4,819,738 தொகையாக இருந்தது. | ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர்கள் காணப்படாததுடன், கடந்த ஆண்டு நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமை மீது வருமானம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | - மேற்படி - |
| (இ) | ஹெனரத்கொட உப அலுவலகத்துக்குரிய 2023 ஜூன் 19 திகதி அளவில் நிலுவை தொகை 29 கடையறைகள் தொடர்பாக ரூபா 1,023,409 தொகை காணப்பட்டது. | அது தொடர்பான குழுவின் விசாரணை அறிக்கை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டது என. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய 157 பொது மக்கள் முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு சிக்கல்கள் காரணமாக தீர்க்கப்படாத போக்கொன்றினை காட்டியிருந்தது என. | பொதுமக்கள் முறைப்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மே 09 திகதி நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்ப சூழ்நிலையின் போது விபத்துக்குள்ளாகிய சபையின் கப் வண்டி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 9,000,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு காப்புறுதி ஆவணங்கள் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2023 ஜூன் 19 திகதி அளவிலும் இழப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இழப்பீடு தொடர்பாக ஏனைய நிறுவனங்களினால் ஏற்பட்டிருந்த தாமதங்களை தவிர சபையினால் தாமதமொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் மூலதன உதவி கடன் பட்டோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் படி ரூபா 21,096,489 தொகை பெறுமதியாக இருந்தது. | இது தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதென. | கடன் பட்டோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 842 கடன்கொடுத்தோர் தொடர்பான மீதி ரூபா 200,087,928 தொகையாக இருந்தது. | 2023 ஜூன் 15 திகதி அளவில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 94,779,056 தொகையாகும் என. | கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 700,275,000 தொகை பெறுமதியான 127 காணிகள் மற்றும் ஏனைய ஆதனங்களின் காணியுறுதிகள் அல்லது உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஏனைய சட்ட ரீதியான ஆவணம் ஒன்று காணப்படவில்லை. | வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகளின் வரையறையின் படி மேற்கொள்ளப்படுகின்றது என. | காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர்களிடம் பெற வேண்டிய மீதி ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தரிடம் ரூபா 86,030 தொகை மற்றும் சேவையை விட்டுச் சென்றிருந்த ஐந்து ஊழியர்களிடம் ரூபா 86,100 தொகை அறவீடு செய்தல் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நிலுவையொன்று காணப்பட்டது. | பணிக் கொடையிலிருந்து அறவீடு செய்வதற்கும், அறவீடு செய்வதற்காக அறிவிப்பதற்கும், கம்பஹா உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு நியாயப்படுத்தும் அறிக்கை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | நிலுவை கடன் மீதி அறவீடு செய்யப்பட வேண்டும். |